ஞானபாநு.

VOL 3. தொகுதி ௩ | 1916 February. ராக்ஷஸ வருஷம் மாசி | No. 11 பகுதி கக

1 - APR 1916

வீர வாழ்க்கை

நாம் எல்லோரும் நமது வாழ்நாளில் ஜயம் விரும்புகிறோம். மாணாக்கன் தனது பரீக்ஷைகளில் தன் சகபாடிகளுக்கெல்லாம் முதலாகத் தேறவேண்டுமென நினைக்கிறான். உத்தியோகத்தில் அமருகிறவன் தான் உயரக்கூடிய உத்தியோகங்களில் உன்னதமானது எதுவோ அதுவரையில் ஏறிவிட வேண்டுமென்று ஆசைப்படுகிறான். உழுது பயிரிடுகிறவன் மாடும் கன்றும் காணியும் கரையுமாகச் சிறப்பாக வாழ்கிறதைத் தன் வாழ்நாளின் நோக்கமாகக் கொள்ளுகிறான். நமது நாட்டு வியாபாரிகளுக்கு கப்பல் வைத்து வியாபாரம் செய்யவேண்டுமென்றாவது, பெரிய ஆலைகள் முதலியன வைத்துக் கோடானு கோடியாய்ச் சம்பாதித்துத் தனலோகத்தில் ஏக சக்கிராதிபத்தியம் வகிக்க வேண்டுமென்றாவது ஆசை பிறக்கத் தகுந்த மனவிரிவு இன்னும் வரவில்லையாயினும், நாளுக்கு நாள் பெரிய வியாபாரங்கள் செய்து பெரிய முதலாளிகளாகப் போகவேண்டுமென்கிற ஆவல் இல்லாமலில்லை.

* * *

ஆனால் நாம் கோரும் ஜயம் நமக்குச் சித்திக்கிறதா? அநேகமாய் இல்லை. நூற்றில் தொண்ணூற்றொன்பது பேர் தங்களுடைய மனோரதம் பூர்த்தியாகாமலே இறந்துபோய் விடுகிறார்கள். குடியானவர்களில் பெரும்பான்மையோர் கடனாளிகளாகவே மரிக்கிறார்கள். வியாபாரிகளில் முக்கால் வாசி சில்லரைக்கடை அந்தஸ்தைவிட்டுக் கிளம்புகிறதே இல்லை. இப்படியேதான் மற்றவர்களும் பிழைக்கவும் மாட்டாமல் சாகவும் மாட்டாமல் சவலைப் பிள்ளைகளைப்போலத் தங்கள் வாழ்நாள் முழுவதுமே இருந்து வருகிறவர்களின் தொகை நமது நாட்டில் எண்ணத்தொலையாது.

* * *

அவரவர்கள் விரும்புகின்ற சகலமும் நிறைவேறியே தீரும் என்பதற்கு ஐரோப்பியருடைய அநுபவமும் நம்முடைய அர்த்த சாஸ்திரங்களும் நிஸ்ஸந்தேகமான சான்றாக நிற்கின்றன. பிரான்ஸில் 300 வருஷங்களுக்குமுன் கோல்பெர்ட் என்ற பெயருள்ள ஒரு சிறிய பையன், நான் இந்த ராஜ்ஜியத்துக்கு மந்திரியாக வருவேன், என்று தன் மனதில் ஒரு சங்கற்பம் செய்து கொண்டான். அதன்படியே அவன் தன் ஐம்பதாவது வயதில் அந்த நாட்டின் மந்திரியாகி, அதன் தொழிலபிவிருத்திக்கு அவன் வெட்டிய அஸ்திவாரம் தான் இப்பொழுதும் அந்த நாட்டை மற்றெல்லா தேசங்களையும் விடச் செல்வ நாடாக்கி இருக்கின்றது. அறுபது வருஷங்களுக்கு முன் அமெரிக்காவில் ஒரு சிறு ஊரில் எடிஸன் என்ற பெயருள்ள ஒரு பையன் தெருவில் பத்திரிகை விற்றுக்கொண்டு அன்றாடம் வருகிற இரண்டணை மூன்றணாவால் ஜீவித்துக்கொண்டிருந்தான். இன்றோ அவன் உலகம் முழுவதும் தன் மெய்க்கீர்த்தி நிரம்பியிருக்க மகா நிபுணனாகவும், மகா செல்வவந்தனாகவும் விளங்கி வருகிறான். நம்முடைய புராணங்களிலுள்ள துருவன் ஏகலவ்யன் கர்ணன் முதலிய வீரர்களின் கதை தெரியாதவர்கள் இல்லை. சரித்திர காலங்களை நாளது வரையில் ஆராயும்போதும் சந்திரகுப்த சக்கிரவர்த்தி, ஷெர்ஷா, ஹைதர் அலிகான், சிவாஜி சத்ரபதி முதலிய யுத்த வீரர்களுடையவும், ஜெம்ஸெட்ஜி ஜிஜீபாய், ஜெம்ஸெட்ஜி தாத்தா முதலிய வியாபார வீரர்களுடையவும், ஆசார்ய ஸ்வாமிகள், ராமகிருஷ்ண பரமஹம்ஸர், விவேகானந்தர் முதலிய தர்ம வீரர்களுடையவும் சரித்திரங்களும், மனம்போல வாழ்வு என்னும் சூத்திரத்தின் உண்மையை நமக்குத் தெளிவுறுத்துகின்றன என்பதில் தடை இல்லை.

* * *

அப்படிக்கெல்லாமிருக்க, இந்தத் தலைமுறையில் நமது நாட்டில் தங்களுடைய எண்ணங்களையெல்லாம் நிறைவேற்றிக் காட்டும் ஜயசாலிகள் ஏன் இல்லாது போய்விட்டார்கள்? நமது ஆசை மாத்திரம் குறையவில்லை. நிறைய செல்வம் சேர்த்து இக லோக சுகங்கள் சகலத்தையும் அனுபவிக்க வேண்டுமென்கிற இச்சை நம்மில் பெரும்பாலார் மனதில் குடிகொண்டு தான் இருக்கிறது. இஷ்டப்பட்ட செல்வத்தை அளிக்கவோ பிரகிருதியும் ஜனசமூகமும் காத்துக்கொண்டேதான் இருக்கின்றன. இருந்

னும் நம்மில் தாரித்திரியமும் களியின்மையும் ஆசாபங்கமும் தான் நிறைந்து கிடக்கின்றன.

* * *

ஆகையால் உலகத்தில் சம்பத்தை அடைய கேவலம் ஆசை மாத்திரம் இருந்தால் போதாது என்று ஏற்படுகிறது. அறிவு, தொழில் ஞானம், ஜனரஞ்சகம், நாணயம், இவை இல்லாமல் யாதொரு பெரிய காரியமும் உலகத்தில் மனிதன் செய்ய முடியாது. ஆனால் இந்தக் குணங்களுள்ளவர்களும் நம்மவர்களில் அநேகர் இருக்கிறார்கள். இவை இல்லாதவர்கள் செல்வத்தில் ஓங்காதது ஆச்சரியமில்லைதான். ஆனால் இவை இருந்தும் தமிழ் நாட்டில் ராக்கிப்ஹெல்லர், ஹாரிஸன், மார்கன், ஆஸ்டர்முதலானவர்கள்போன்ற கோடீசுவரர்களையாவது, ஆபெர்டீன் பிரபுபோன்ற நிலச்சுவான்தாரர்களாவது, நியூமன், பர்க், எமெர்ஸன், கார்லைல், ப்ரௌனிங், டாகூர், பங்கிம் சந்திரர் முதலானவர்களைப்போன்ற நூலாசிரியர்களையாவது நாம் ஏன் காணவில்லை? நம்மிடத்தில் என்னதான்குறைவாக இருக்கிறது? எந்த ஒன்று இருந்தால் நமக்கு இருந்தும் மற்றக் குணங்களைச் சோபித்துக்காட்டி அது நம்மை லௌகிக முன்னேற்ற மார்க்கத்தில் கொண்டுபோய்ச் சேர்ந்துவிடும்?

* * *

உலகக்கியாதிபெற்ற யுத்தவீரர்கள், அர்த்தவீரர்கள், கல்வி வீரர்கள், தர்மவீரர்கள், இவர்களில் ஒவ்வொருவர் சரித்திரத்திலும் இந்தக் கேள்விகளுக்குச் சரியான பதில் கிடைக்கும். அப்படியானால் உலகத்தோரெல்லாம் தங்களை வீரர்கள் என்று சொல்லும்படியாக இவர்கள் என்ன வேலை செய்தார்கள்? எப்படி நடந்துகொண்டார்கள்? இந்த வீரர்களின் வீரரகசியத்தைத் திருவள்ளுவநாயனார் ஒரு அற்புதமான குறளில் அருளிச் செய்திருக்கிறார்.

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.

இதுதான் ரகசியம். நாம் நினைக்கும் நினைவுகளைத் திண்மையோடு நினைக்கின்றோமா? நாம் கொண்ட ஆசைகளை நிறைவேற்ற, பலிக்கச்செய்ய, நமது ஆத்மபலம் அனைத்தையும் பிரயோகிக்கின்றோமா? என்பதைப்பொறுத்திருக்கிறது நம்முடைய காரியசித்தி.

இந்தத் திண்மைதான் ராஜகுணம். மற்றக்குணங்களும் சக்திகளும் இந்தக் குணத்தை அலங்கரிக்கும், அதை நயப்படுத்தும், அதற்கு உத்விபுரியும், அதற்குப் பரிபூரண தைரியமும் தரும். ஆனால் திண்மை மாத்திரமில்லாமற் போனால் மற்றக் குணங்களெல்லாம் ஜீவசக்தி இல்லாத சரீரம் போலவும், செங்கோன் மன்னன் இல்லாத குடிகள் போலவும் ஆகிவிடும்.

* * * *

ஆகையால் நாம் இந்தக் குணத்தை அவசியம் நம்முடைய தாக்கிக் கொள்ளவேண்டும். நம்மிடத்திலுள்ள சகல சொத்தையும் கொடுத்து இந்தப் பிடிவாதகுணத்தை வாங்கினாலும்கூட அது நஷ்ட வியாபாரம் ஆகாது. ஏனெனில் நம்மைக் கேட்காமலே நம்முடைய செல்வம் போய்விடும். ஆனால் நமக்கு பிடிவாதம் மாத்திரம் இருக்குமாயின் அது இழந்த செல்வத்தையும் திரும்பி சம்பாதித்துத் தருவதோடுகூட அதற்கும் மேலான செல்வத்தையும் நமக்குக் கொண்டுவந்து கொடுக்கும்.

* * * *

நம்மிடத்தில் ஒரு கெட்ட வழக்கம் இருக்கிறது. அது நம் ஜாதியிலேயே வேரூன்றிப் போயிருக்கிறது. அது என்னவென்றால், எந்த விஷயத்திலாவது ஒருமனிதன் பரிபூரணமான திறமையையோ, வெற்றியையோ காட்டிவிட்டானானல் அவனைத் தெய்வாம்சத்தைச் சேர்ந்தவன், அல்லது நேரிட தெய்வகடாக்ஷம் பெற்றவன் என்று சொல்லிவிட்டு அவன் அநுசரித்த மார்க்கத்தைப் பின்பற்றமாட்டோம் என்று விடுகிறோம். ஸ்வாமி விவேகானந்தர் பேர்வைத்தசபைகள் இல்லாதவூர் நமதுநாட்டில்அநேகமாக இராது. ஆனால் அந்தச் சபையினர்களெல்லாம் சுவாமியை அவதாரபுருஷனாக்கி அவர் படத்தைப் பூஜைதான் செய்து வருகிறார்களே ஒழிய, அவர்விரும்பியபடி அவரதுபோன்ற ஞான வலிமையையும், மன உருக்கத்தையும், தேசபக்தியையும், தொழில் புரிவதற்குச் சளைக்காமையையும் சம்பாதித்துக்கொண்டு ஆரியாவர்த்தத்திலும் வெளி உலகத்திலும் ஒருநவயுகத்தை உண்டாக்குவோம் என்கிற நோக்கத்தைக் கைக்கொள்ளமாட்டோம் என்கிறார்கள். நம் ஊரில் ஒருவன் ஏழையாக இருந்துவிட்டு நாளாவட்டத்தில் பெரிய பொருளாளியாகி விட்டானானல் அவனுடைய விடாமுயற்சியையும் ஊக்கத்தையும் கொண்டாடாமல் அவனுக்கு அதிர்ஷ்டம் வந்துவிட்டது. அல்லது அவனுக்கு லக்ஷ்மீகடா

க்ஷம் வந்துவிட்டது என்றுசொல்லி முடித்துவிடுகிறோம். வெற்றியெல்லாம் தெய்வாமிசம் ஆதும்பக்ஷத்தில் மனிதன் ஏன் உழைக்க வேண்டும்? உழைத்து என்ன பிரயோசனம்? இப்படி நாம் வார்த்தையால் விவரிக்காமற்போனாலும், இந்த நம்பிக்கையுள்ளவர்கள் எப்படி நடப்பார்களோ அப்படியேதான் நடந்துவருகிறோம்.

* * * *

பிடிவாத குணம்தான் உண்மையான தேவகடாக்ஷம். அது இருந்தால் சகலத்தையும் சாதிக்கலாம். அது இல்லாவிடில் ஈசுவரனே நேரவந்து நமக்குச் சகல சௌபாக்கியங்களையும் கொடுத்தால் கூட அவை நமக்குத்தக்காது. இந்த விஷயம் நமது அறிவில் நன்றாகப்படவேண்டுமானால் சாதாரணமனிதர் சரித்திரங்களை நாம் படித்தோ கேட்டோ அறியவேண்டும். ஆங்கிலத்தில் ஸ்மைல்ஸ் என்றொருவன் முக்கியமாகத் தன் நாட்டுக்கீர்த்திமான்கள் சரித்திரத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு, ஆத்மோபகாரம், கடமை, யோக்கியதை, என்று மூன்று புத்தகங்கள் எழுதியிருக்கிறான். நம் நாட்டு இளையோர்களும் முதியோர்களும் இப்புத்தகங்களை பக்தி சிரத்தையோடு படித்து, அவைகள் ஆயிரம் உதாரணங்களை வாயிலாகக்கூறும் இந்தத் திண்மையை சம்பாதித்துக் கொள்ளவேண்டும்

* * * *

நம் தமிழ்நாட்டில் ஏழைகளாகப் பிறந்து தங்களுடைய முயற்சியினாலும், மனத்திண்மையினாலும் பெரிய பதவிக்கு வந்தவர்களின் சரித்திரங்களைச் சிலர் தமிழில் எழுதமுயன்றால் அது மிகவும் பரோபகாரமாக இருக்கும். முக்கியமாக வியாபாரப்பிரமுகர்களுடைய கதைகள் தான் அதிகமாகவேண்டும். ஏனெனில் சாதாரண ஜனங்களுக்கு செல்வத்தின் பேரில் இச்சை இருக்கும் வரையில், தர்மத்திற்கும் நோயற்ற வாழ்வுக்கும் செல்வம் ஆதாரமாக இருக்கும் வரையில் செல்வமீட்டலானது ஒரு ஜாதியின் காரியங்களில் முக்கியமானதாக இருந்தே தீரும். ஆகவே, பிறரை நலியாமலும், மோசம் செய்யாமலும், நேரான வழியில் ஏராளமானபொருள் சம்பாதிக்கும் மார்க்கங்களை மனிதருக்கு எடுத்துக்காட்டுவது அறிவாளிகளின் தொழிலே ஆகும்.

* * *

ஆனால் செல்வம் சேர்ப்பது ஒன்று மாத்திரமன்று மனிதனுடைய காரியம், பாண்டித்தியம், கவிதை, சிற்பம், சித்திரம்,

கானம், ராஜதந்திரம், பரோபகார ஸ்தாபனம்; ஆத்மதரிசனம் இவையனைத்தும் மனிதனுக்கு உரிமையுள்ள தொழில்கள். அவன் அவனுடைய இயற்கைக்கும் சகவாசத்துக்கும் ஏற்றவாறு அவன் அவன் ஒரு தொழிலில் இறங்குகிறான். அந்தத் தொழிலில் தன்னிடமுள்ள சகல சக்தியையும் பிரயோகித்து மற்றப்பேர்களிடம் காணாத ஒரு தனி நயத்தையோ காம்பீர்யத்தையோ காட்ட ஒவ்வொருவனும் முயலவேண்டியது. அது கஷ்டமாக இருக்கும். மத்தியில் பலதடைகள் வந்து குறுக்கிடும். அப்பொழுது அவன்தான் பிடிவாதத்தை விடாமல், இடுக்கண்களை அவை அவைகளுக்கு ஏற்ற சாதனங்களால் களைந்து, முன்னிலும் அதிகமாக உழைத்து வரவேண்டியது.

* * * *

யோகம் என்பதும் தவம் என்பதும் எங்கேயோ காட்டில் போய் அப்பியசிக்கவேண்டிய மார்க்கங்களல்ல. நீ செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் எவ்வளவுக்குத் தவமும் யோகமும் பிரயோகிக்கிறாயோ அவ்வளவுக்குத்தான் நீ வெற்றியை யடைவாய்! இது விஷயமாக நமக்குக் கணியூர் கிருஷ்ணய்யர் ஞாபகம் வருகிறது. அவரை யோகி என்று சொன்னால் அவரைத் தெரிந்தவர்கள் ஒருவேளை சிரித்தாலும் சிரிப்பார்கள். ஆனால் உண்மையை ஒப்புக்கொண்டு தீரவேண்டும். அவர் ஒரு யோகியே. சிறுவயதுமுதல் அவர் ஒரு பெரிய ஆஸ்திதி சம்பாதித்து விடவேண்டும் என்கிற ஒரே நோக்கத்துடன் வேலைசெய்துவந்தார். இராப்பகல் இருபத்துநாலு மணிநேரமும் அவருக்கு அதுதான் சிந்தை. அந்த எண்ணத்தை நிறைவேற்றக்கூடிய மார்க்கம் எது இருந்தாலும் சரி, அதைத் தேடிவிடுவார். அதற்குச் சம்பந்தமில்லாத மற்ற எந்தக் காரியத்திலும் பிரவேசிக்கமாட்டார். இந்தக் காரியம் கஷ்டமானது என்று அவர் நினைத்ததில்லை. தன் காரியசித்திக்கு இது அவசியமா? அதுகூட இல்லை, இது சாதகமாக இருக்குமா? என்ற ஒருகேள்விதான் அவர் தன்னைக் கேட்டுக்கொள்ளுவார். சாதகமாக இருக்கும் என்று தோன்றிவிட்டாலோ, உடனே அது எவ்வளவு கஷ்டமான வேலையாக இருந்தாலும் சரி, மற்ற ஜனங்கள் எத்தனை பரிகாசம் செய்தாலும் சரி, அதைத் துவக்கிக்கட்டாயம் முடித்தே தீருவார். இவர்போன்றவர் சரித்திரங்களை அறிந்து அச்சிட்டால் நமது நாட்டிற்குத் தற்காலம் மிகப் பிரயோசனமாக இருக்கும்.

* * *

ஆங்கிலம் படித்துவிட்டு நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து பேர் கார்யஸ்தலத்திலும் (தாலூகா,) கணக்குக் கார்யஸ்தலத்திலும் (ஆடிட்டர் ஆபீஸிலும்) ஒருவர்மேலொருவர் விழுந்துகொண்டு நுழைந்து பதினைந்து ரூபாய் சம்பளத்துக் காசு அதிர்ஷ்டச்சீட்டு போட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பதிலாக சாகுபடித் தொழிலையோ வியாபாரத்தொழிலையோ கைக்கொண்டு, அவைகளை நடத்தும் முறைமைகளை நன்றாகப் பரிசோதித்தறிந்து, ஏகாக்கிர புத்தியோடும், "நான் இதில் விருத்தி அடைந்தேதான் தீருவேன்" என்கிற உறுதியோடும் உழைக்க ஆரம்பித்தால் எத்தனை சுகமாக இருக்கும்? தனக்கும் பிறருக்கும் எத்தனை பயன் தரும்? அதில் எத்தனை வீரமிருக்கும்?

* * * *

வீரவாழ்க்கை என்பது யுத்தகளத்தில் சென்று பிறருக்குக் காயமுண்டாக்கி, தன் காயத்தைத் தாங்குகிறது மாத்திரமில்லை. எவனொருவன் சோம்பலும் உபேக்ஷையும் இல்லாமல் தான் எடுத்த காரியம் சிறிதாக இருந்தாலும் பெரிதாக இருந்தாலும், செல்வம் தருவதாக இருந்தாலும் புகழ் தருவதாக இருந்தாலும் மோக்ஷம் தருவதாக இருந்தாலும், அதை ஒரே உறுதியுடன் செய்ய முயல்கின்றானோ, மத்தியில் வரும் இடுக்கண்களைக் கண்டு மனமுடையாமலும், வேலையின் கஷ்டத்தைக் கண்டு பின் வாங்காமலும், ஒரே உற்சாகத்துடன் செய்து முடிப்பதைத் தான் தன் கடமையாகக்கொண்டு மேலும் மேலும் செல்கின்றானோ, அவன் வாழும் வாழ்க்கை வீரவாழ்க்கையே. அஃதின்றிய வாழ்வு சுகமாக இருப்பதுபோல இருக்கலாம். ஆனால் அது கேவலம் பெண்மையே.

* * * *

உண்மையில் நாம் சொன்ன வீரவாழ்க்கை வாழ முயன்று பார்த்தால் அதிலிருக்கும் சுகத்துக்கு மற்றைச் சுகங்கள் ஈடில்லை என்று தோன்றிவிடும். மனத்திண்மையினால் மனிதன் தேவனுக்குச் சமானனாகி விடுகிறான். தேவபோகத்தை தேவர்களைப் போன்ற ரஸஞானத்துடன் அநுபவிப்பதற்கு அது ஒன்றுதான் சாதனம்.

ஸ்ரீ விவேகாநந்த ஸ்வாமிகளின் கடிதம்.

ஐக்கியநாடுகள்,
அமெரிக்கா.
31—8—1894,

அரிய—,

—டத்திலிருந்து ஒரு கடிதம் கிடைக்கப் பெற்றேன்; ஆனால் அவருடைய கேள்விகளுக்கெல்லாம் கூறுவதற்கு ஒரு புத்தகம் எழுதவேண்டியிருக்கிறது. ஆதலால், நான் அவரை ஆசீர்வதிக்கின்றேனென்றும் நானும் அவரும் அபிப்ராயங்களில் வித்தியாசப்பட்டுக்கொண்டே ஒத்துழைப்போமென்றும் நேர் மாறுபாடான விஷயங்களில் ஒற்றுமையைப் பார்க்கிறோமென்றும் அவரிடத்தில் சொல்லுக. ஆகையால், அவர் எதனிடத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறார் என்னும் விஷயத்தைப்பற்றிக் கவனிக்கவேண்டிய அவசியமில்லை; அவருடைய நடத்தையும் அதற்கொத்து இருக்க வேண்டும்.

தங்களுடைய தேச நன்மையின்பொருட்டு தங்களுக்குள் பரஸ்பரம் உள்ள வித்தியாசங்களை மறந்துவிடுதற்குப் போதுமாய தைரியமும் பெருந்தன்மையும் வாய்ந்துள்ள பெரிய தேசாபிமானிகள் எல்லோரிடத்தும் வைத்திய நிபுணரிடத்திலும் மற்றுமுள்ள நண்பர்களிடத்தும் நான் அளவிடற்கரிய அன்பு செலுத்துவதாகச் சொல்லுங்கள்.

* * இப்பொழுது ஒருசிறிய சபையை ஸ்தாபியுங்கள்...... ...ஏற்பாடு முழுமைக்கும் நீங்கள் தாம்—தலைவரைப் போலன்று, வேலைக்காரனைப்போல—ப் பொறுப்பு வகிக்கவேண்டிவரும் தலைமை வகிப்பதாகச்சிறிது காட்டிக்கொண்டாலும், அது பொறாமையைக் கிளப்பிவிட்டு எல்லாவற்றையும் அழித்துவிடுகிறது என்பதைத் தாங்கள் அறிகிறீர்களா!.........எண்ணங்களை எங்கும் பரப்புவதில் மெல்ல வேலை செய்யுங்கள்......மைசூர் நமது சபைக்குச் சீக்கிரத்தில் ஒரு பெரிய கோட்டைபோன்றதாகும். ....சென்னையில் ஒரு ஆலயம் கட்டுவதற்காக மைசூரிலிருந்தும் மற்ற இடங்களிலிருந்தும் நிதி வசூல் செய்ய முயற்சி செய்யுங்கள். அந்த ஆலயத்தில் சந்நியாசிகளாகிய போதகர்கள் இருப்பதற்கும் யதேச்சையாக வருகின்ற பைராகிகள் தங்குவதற்

..

கும் காரிய ஸ்தலத்திற்குமாகச் சில அறைகளும் ஒரு புத்தக சாலையும் இருக்கவேண்டும். இவ்விதமாக நாம் மெல்ல மெல்ல அபிவிருத்தி யடையலாம்.........இதுவரை நீங்கள் நன்றாக வேலை செய்திருக்கிறீர்கள். பலமெல்லாம் உங்களுக்குக் கொடுக்கப்படும். * * *

எனது வேலைக்கு இது ஒரு பெரிய பூமி; இங்கு செய்யப்படுகின்றவை யெல்லாம் இங்கிலாந்தில் இனிமேல் நான் செய்யப்போகின்ற வேலைக்கு வழியைத் தயார் செய்கின்றது. * *

பணத்தை வைத்துக்கொள்வது அல்லது அதைத் தொடுவது கூட எனக்குப் பெருங்கஷ்ட மென்று தாங்கள் அறிவீர்கள். அது மனத்தின் அமைதியைக் கெடுத்துத் தாழ்மைப்படுத்துகின்றது. ஆகையால் பணவிஷயத்தைப்பற்றி கவனிப்பதற்குத் தாங்கள் ஒரு சபை ஸ்தாபிக்கவேண்டும். இங்கு எனது பண விஷயங்களையெல்லாம் ஸ்நேகிதர்களே கவனித்துக் கொள்கிறார்கள். அவலக்ஷணமான பண விஷயங்களினின்றும் நான் விடுவித்துக்கொண்டேனால், எனக்கு வெகு சுகமாயிருக்கும். ஆகையால், நீங்கள் எவ்வளவு சீக்கிரத்தில் சபை ஸ்தாபித்துக் கொண்டு கார்யதர்சி யென்றும் பொக்கிஷாதிபதி யென்றும் ஏற்படுத்திக்கொண்டு இங்குள்ள எனது ஸ்நேகிதர்களுடனும் அபிமானிகளுடனும் நேருக்கு நேரே கடிதப் போக்குவரவு வைத்துக்கொள்ளத் தயாராகிறீர்களோ, அவ்வளவு நன்மையுண்டு தங்களுக்கும் எனக்கும். சீக்கிரமாக இதைச் செய்துவிட்டு எனக்கு எழுதுங்கள். சபைக்கு எவ்வகுப்பையும் குறியாத ஒரு பெயரைக் கொடுங்கள். * * * * * *

* * உங்களுக்குப் பெருங்காரியங்கள் செய்யப்படப்போகின்றன.........தாங்கள் தங்களுடைய கல்லூரி வேலையினின்றும் நீங்கி ஸ்வதந்திரராக நின்று தங்களுடைய முழு மனத்தையும் வேலையினிடத்துச் செலுத்தும்பொழுது தாங்களும் தங்களுடைய குடும்பமும் பட்டினி கிடவாமலிருக்கும்படியான ஏற்பாடுகளை மெல்ல மெல்லச் செய்து கொடுக்கலாமென்று நம்புகிறேன். ஆகையால் வேலை செய்யுங்கள், எனது பையன்காள், வேலை செய்யுங்கள். வேலையின் முரட்டுப்பாகமானது மிருதுவாக்கப்பட்டுச் சீர்ப்படுத்தப்பட்டு விட்டது, இப்பொழுது அது வருஷந்தோறும்

மேன்மேலும் நல்ல ஸ்திதியை யடைந்துகொண்டே போகும் நான் இந்தியாவுக்கு வரும் வரையில் வேலை ஒழுங்காக நடக்கும்படி நீங்கள் செய்துகொண்டிருந்தால் போதும், வேலை ஆச்சர்யமான அபிவிருத்தி யடைந்துவிடும். நீங்கள் இவ்வளவு செய்துவிட்டதற்கு ஆனந்தமடையுங்கள். மனத்தில் ஏக்கம் உண்டாகும்பொழுது, சென்ற வருஷத்திற்குள் செய்யப்பட்டிருக்கின்றவற்றை யெல்லாம் நினைத்துப் பாருங்கள். அஸ்திவாரமே யில்லாது வெளிக்கிளம்பியிருக்கும் நம்மை உலகம் முழுதும் இப்பொழுது கவனித்துக்கொண்டிருக்கின்றது. இந்தியா மாத்திரமன்று, உலகம் முழுதுமே நம்மிடத்திலிருந்து பெருங்கார்யங்களை எதிர் பார்க்கின்றது.

* * * * உண்மை, அன்பு, விஸ்வாசம் இவற்றை எதிர்ப்பதற்கு எதனாலும் முடியாது. நீங்கள் உண்மையைப் பின் பற்றுகின்றீர்களா? மரணம் வரினும் ஸ்வயநலமற்றிருக்கின்றீர்களா? அன்பு நிறைந்து இருக்கின்றீர்களா? அப்படியாயின், பயப்படாதீர்கள், மரணத்திற்கும் அஞ்சாதீர்கள். எனது பையன்காள்! மேலே செல்லுங்கள். உலகு முழுதினுக்கும் பிரகாசம் வேண்டியிருக்கின்றது. உலகம் எதிர் பார்த்துக்கொண்டே யிருக்கிறது. இந்தியாவினிடத்தில் தான் அந்த பிரகாசம்—ஜாலவித்தையிலன்று, மாந்திரீகத்திலன்று, ஆனால் உண்மையான மதத்தின் பெருமைகளைப் போதிப்பதில், உயர்ந்த ஆத்மஞானத்தில்—இருக்கிறது. ஆதலால்தான் ஈஸ்வரன் இந்த ஜாதியை எத்தனையோ மாறுதல்களாகியும் இன்னும் காப்பாற்றிக்கொண்டு வருகிறார். இப்பொழுது சமயம் வந்துவிட்டது. எனது தைர்யமுள்ள பையன்காள்! நீங்கள் அனைவரும் பெருங்கார்யங்களைச் செய்வதற்குப் பிறந்தவர்களென்று நம்புங்கள். நாய்க்குட்டிகள் குலைக்கும் சத்தத்தைக் கேட்டு பயப்பட்டு விடாதீர்கள். ஆகாயத்தில் முழங்கும் பேரிடியைக்கேட்டும் பயப்படாதீர்கள்; ஆனால் எழுந்து வேலை செய்யுங்கள்.

எப்பொழுதும் உங்களிடத்தில் பிரியமுள்ள

விவேகாநந்தர்.

வள்ளுவர் வாய்மொழி.

[பிரஹ்ம ஸ்ரீ பர்தூர் சேஷாத்திரி யய்யங்காரவர்கள் எழுதியது]

1-வது கடவுள் வணக்கம்.

(1) அகரம் எழுத்துக் களுக்கெல்லாம் தலைமை யானது. அதுபோல கடவுள் உலகத்துக்குத் தலைவர்.

(2) ஒருவன் எவ்வளவு படித்தவனாயினும் அவன் கடவுளை வணங்கானாயின் அவனுக்குப் படித்ததனால் ஒரு நன்மையுமில்லை.

(3) கடவுள் அன்பர்களுடைய இருதயத்தில் அமர்ந்திருக் திருக்கிறார். அவரை இடைவிடாது நினைப்பவர்கள் மோட்சமடை வார்கள்.

(4) கடவுள் விருப்பு வெறுப்பில்லாதவர். அவருடைய திரு வடிகளை எப்பொழுதும் தியானம் செய்பவர்களுக்கு ஒரு போ தும் துன்ப முண்டாவதில்லை.

(5) கடவுளுடைய புகழையே எப்பொழுதும் சொல்லுபவ ர்களிடத்தில் வினைகள் சென்றடைவதில்லை.

( ) கடவுள் வேதாகமங்களை வெளியிட்டார். அவைகளிற் கூறிய படி நடக்கிறவர்கள் பிறவித்துன்பம் நீங்கப் பெற்று அழி யா வாழ்வைப் பெறுவார்கள்.

(7) கடவுள் நிகரில்லாதவர். அவருடைய திருவடிகளை இடை விடாது நினைப்பவர் களுக்கே மனத்துன்பம் நீங்கும். மற்றவர்க ளுக்கு நீங்காது.

(8) கடவுள் தர்ம ஸ்வரூபி. அவருடைய அடிகளை நினைப்ப வர்களே உலக வாழ்க்கையின் கஷ்டங்களைக் கடப்பார்கள். மற்ற வர்கள் கடக்க மாட்டார்கள்.

(9) தமக்குரிய தொழில்களைச் செய்யாத இந்திரியங்கள் பயனற்றவை யாதல்போல கடவுளை வணங்காத தலைகளும் பய னற்றவை.

(10) கடவுளுடைய திருவடியை நினைப்பவர் களுக்குப்பிறவி யற்று விடும். நினையாதவர்களுக்கு அறாது,

2-வது மழையின் பெருமை.

(1) உலகத்தில் உயிர்கள் ஜீவித்திருப்பது மழை விடாமற் பெய்வதனுல் தான். ஆனதுபற்றி மழையே அமிர்தம் என்று அறியத்தக்கது.

(2) மழை உயிர்களுக்கு உணவை உண்டாக்கித் தருவதுமல்லாமல், தானே உண்ணுதற் குரிய நீராயு மிருக்கிறது.

(3) மழை பெய்ய வேண்டிய காலத்தில் பெய்யா விட்டால் உலகத்தில் உயிர்களைப் பசிவருத்தும்.

(4) மழை பெய்யாவிடின் உழவர்கள் தங்கள் தொழிலைச் செய்ய மாட்டார்கள்.

(5) மழையானது பெய்யாமல் உலகத்தாருடைய அநேக தொழில்களைக் கெடுக்கவும், பெய்து தொழில்களைச் சிறக்கவும் செய்யும் வல்லமை யுடையது.

(6) மழை பெய்தால் தான் உலகத்தில் உயிர்கள் வாழும்; பெய்யாவிடில் பூமியில் புல்லுக்கூட முளைக்காது.

(7) மழை பெய்யாதாயின் கடலிலும் ஜல ஜந்துக்கள் பிறவாததோடு முத்தும் பவளமும் உண்டாகாது.

(8) மழை பெய்யாவிடின் உலகத்தில் தேவர்களுக்குச் செய்யப்படுகிற திருவிழாக்களும் பூசைகளும் நடைபெறு.

(9) மழையில்லா விட்டால் உலகத்தில் தானமும் தவமுமாகிய இரண்டும் நிலைபெற மாட்டா.

(10) தண்ணீரில்லாமல் உலக வாழ்க்கை நடைபெறு தென்பது நிச்சயம், அதுபோலத் தண்ணீரும் மழையில்லாமல் உண்டாகா தென்பது நிச்சயம்.

3-வது துறவிகளுடைய உயர்வு.

(1) எல்லா மதத்தாருடையவுமாகிய சிறந்த நூல்களில் உயர்வாகக் கூறப்பட்டிருப்பது துறவிகளுடைய பெருமையேயாம்.

(2) இவ்வுலகம் தோன்றிய நாளிலிருந்து இன்று வரைக்கும் பிறந்து இறந்தவர்களைக் கணக்கிட ஒருவராலும் முடியாது. அதுபோலவே துறவிகளுடைய பெருமையும் ஒருவராலும் அளவு படுத்திக் கூற முடியாது.

(3) பிரபுக்கள் அரசர்கள் முதலியவர்களுடைய பெருமையினும் துறவிகளுடைய பெருமை சிறந்தது.

(4) அறிவினால் ஐம்பொறிகளையும் அடக்குபவனே துறவியாவான். அத்தகைய துறவி மோட்சத்தையே அடைவான்.

(5) துறவியினுடைய வலிமை எப்படிப்பட்டது என்பதற்கு தேவர்களுடைய அரசனாகிய இந்திரனே தகுந்த சாட்சியாவான்.

(6) துறவிகளாயுள்ளோர் அருமையான செயல்களைச் செய்வார்கள். துறவிகளல்லாதவர்கள் அருமையான செயல்களைச் செய்யமாட்டார்கள்.

(7) ஐம்பூதங்களையும் அவற்றிற்குக் காரணங்கள் ஆகிய தத்துவங்களின் பிரிவுகளையும் உள்ளபடி உணர்ந்தவனே உலக முழுவதும் அறிந்தவன்.

(8) துறவிகளுடைய வாயினின்று வரும் ஒவ்வொரு சொல்லும் பயன் கொடுத்தே தீரும். அவ்வாறான துறவிகளுடைய பெருமையை அவர்கள் கூறிய மந்திரங்களே தவறாமற் பயன் கொடுப்பதினால் அறிவிக்கும்.

(9) உத்தம குணங்களையுடையவர்களாகிய துறவிகளுக்கு கோபம் ஒருபோதும் உண்டாகாது; கோபமுண்டாயினும் நிமிஷநேரத்துக்குமேல் நிற்காது. அந்நிமிஷ கோபத்தையும் கோபத்துக்குக் காரணமாயிருந்தவர்களால் தம்மிடம் பயன்படாமற் றடுக்க முடியாது.

(10) துறவிகள் எல்லாவுயிர்களிடத்திலும் கருணை கொண்டு நடப்பதால் அந்தணர் என்று சொல்லப்படுகிறார்கள்.

4-வது தருமத்தின் வலிமை.

(1) மனிதர்களுக்கு மோட்சத்தையும் சுவர்க்கத்தையும் தருமம் கொடுக்கும். ஆகையால் தருமத்தைவிட நன்மையைத் தருவது வேறில்லை.

(2) தருமத்தைச் செய்வதைக் காட்டிலும் நன்மையும் அதைச் செய்யாமல் மறப்பதைக் காட்டிலும் தீமையும் இல்லை.

(3) எந்த எந்தவகையாகத் தருமம் செய்யலாமோ அந்த அந்த வகையிலெல்லாம் தன்னாலியன்ற அளவு ஒருவன் தருமம் செய்யவேண்டும்.

(4) செய்பவன் மனத்திற்கெட்ட எண்ணமில்லாது செய்வதே தருமமெனப்படும். மனத்தூய்மையில்லாத பேச்சும் வேஷமும் மாத்திரம் தருமமென்று சொல்லப்படாது, மயக்கும் படாடோபமாகும்.

(5) பொறாமை, ஆசை, கோபம், கடுஞ்சொல், இவைகளைத் தன்னிடமிருந்து நீக்கி, ஒருவன் செய்யும் தருமமே தருமமெனப்படும்.

(6) நாளைக்குச் செய்வோம், பிறகு பார்த்துக்கொள்வோமென்று அசட்டை செய்யாமல் தினந்தோறும் தருமத்தைச் செய்யவேண்டும். யாதொரு துணையுமில்லாமல் தனியே உயிர் நீங்குங்காலத்தில் அவ்வுயிருக்கு அழிவில்லாத துணை தருமமேயாம்.

(7) சாத்திரங்களில் தருமஞ் செய்வதின் பயன் கூறப்பட்டிருக்கிறது. அதைவிட பல்லக்குச் சுமப்பவர்கள் அதில் ஏறிச் செல்வோன், இவர்களுடைய நிலைமைக்குக் காரணத்தை உய்த்துணர்வதினாலேயே செவ்வையாய்த் தருமத்தின் பயன் வெளிப்படும்.

(8) தவறாமல் ஒவ்வொருநாளும் தருமத்தை ஒருவன் செய்து வருவானாயின் அச்செய்கை அவனுக்குப் பிறப்பை நீக்கும்.

(9) தருமஞ்செய்வதால் உண்டாகும் இன்பமே இன்பம்; அது புகழையும் உண்டாக்கும். தருமத்தோடு சம்பந்தப்படாத இன்பமெல்லாம் துன்பம் அல்லாமல் இகழ்ச்சியையு முண்டாக்கும்.

(10) ஒருவன் அவசியம் செய்யவேண்டியது தருமமே, செய்யாது ஒழிக்கவேண்டியது அதருமமே.

நமது பலசரக்குக் கடை.

("விச்வாமித்ரர்" எழுதுகிறார்.)

நமது பேனாவை அதிகதூரம் நீட்டவேண்டாமென்றும், யுத்தம் அதிக மும்முரமாகவிருப்பதால் நமது கடையில் வர்த்தகம் சிறிது நிதானமாக நடக்கட்டும் என்றும் பத்ராதிபர் நமக்கு எழுதுகிறார். யுத்தங்காரணமாகக் காகிதங்களின் விலையேறிவிட்டது. இது ஒருபுறமிருக்க, என்வியாபாரம் அதிகமாக நடப்பதை வாசகர்கள் விரும்புகிறார்கள் இல்லை என்று நான் அறிவிக்கப்படுகிறேன். அப்படியானால் என் கடையைக்கட்டி விடலாம் என்றும் ஒருசமயம் நினைத்தேன். ஆனால் நான்சொல்லவேண்டிய பலவிஷயங்களை முற்றிலும் தெரிவிக்காமல் நடுவில் நிறுத்த வெட்கமுறுகின்றேன். ஏற்கெனவே தென்னிந்தியர்களின் ஆரம்ப சூரத்வகுணம் பலராலும் இகழப்படுவதைக்கருதி, தைரியங்கொண்டேன். நல்லவியாஸத்தின் லக்ஷணம் சுருங்கச் சொல்லல். மேன்மைகுணம் பொருந்தியவர்கள், தாம் சொல்லவேண்டியவைகளை மிகவும் சுருக்கமாகவேசொல்லுவார்கள். பெரியமனிதர் எனப்படுவோர் ஸம்பாஷணை காலத்தில் மிகச்சிலவார்த்தைகளில் தமது உட்கருத்துக்களைத்தெரிவிப்பராம். ஆனால் எனக்கு அந்தப்பெரிய மனுஷத்தனம் ஏது?

* * • •

நாகரிகத்திலும் பல அம்சங்கள் இருக்கின்றன. மேல் நாட்டார் தம் நாகரித்தை இந்தியாவில் நுழைத்துப் பலவிதத்திலும் நமக்கு உதவிசெய்கிறார்கள் என்பது உண்மையே. வாழ்க்கையின் இன்பத்தைச்சரியானபடி அநுபவிக்க எத்தனைவழிகள் இருக்கின்றனவோ அத்தனை புதியவழிகள் ஜனங்களின் உயிரைப்பறிக்கவும் இருக்கின்றன. மேல் நாட்டாரின் ஸஹாயத்தால் "ப்ளேக்" என்னும் மிகவும் அநுகூலமான கருவி ஒன்று நமக்குக்கிடைத்திருகிறது. உலகத்தில் வாழ்க்கைக்கென்று ஜனங்களுக்குள் ஸதாகாலமும் போர்நடக்கின்றதென்றும், ஜனத்தொகை அதிகமாக அதிகமாக, அந்தப்போர் மிகவும் கோரமாய் விடுகின்றதென்றும் மேல் நாட்டுச் சாஸ்திரிகள் கூறுகிறார்கள். இந்தப் "பிளேக்" வியாதி அதிகசுலபமாக ஜனங்களைக்கொன்றுவிட்டு வாழ்க்கைப் போரை சாந்தமாக ஆக்குகின்றது. இது ஒரு பெரிய உதவியல்லவா.?

இந்தக்கால நாகரிகத்தின் புதிய அம்சமாகிய இந்தப் "பிளேக்" இதற்குமுன் இந்தியாவில் இருந்ததில்லை. இந்த வாத்தை, மேல்நாட்டார்மிகவும் கருணையுடன் நமக்குக் கொடுத்தனர். இந்த வியாதி எலிகள் மூலமாகப் பரவுகின்றதாம். இந்த வியாதி இந்தியாவில் நுழைவதற்குமுன் இங்கு எலிகளே இல்லைபோலும்! நம் முன்னோர்கள் ராக்ஷஸர்கள், சத்ருக்கள், காட்டுமிருகங்கள் ஆகிய இவைகளை ஸம்ஹரித்துவந்தனர். ஆனால் இக்காலத்து வீரர்களும், கலைவல்லவர்களும், ஜீவகாருண்யசீலர்களும், எலி, கொசு, ஈக்கள்-ஆகிய இவைகளின் மீது துவஜம் எடுத்துயுத்தம் செய்கிறார்கள். இதில் எவர் உயர்ந்தவர் என்பதை வாசகர்கள் அறிந்து கொள்க.

* * *

எனக்கு ஒரு தமிழ்ப்பண்டிதர் நண்பர். அவர் கொஞ்ச நாளைக்குமுன் நாலடியார் ஒன்று பிரசுரம் செய்து எனக்கு ஒரு பிரதி அனுப்பினர். அதில் செய்யுள்களும் அவற்றின் பொருளும் மாத்திரமே இருந்தன. இப்படிப்பட்ட புஸ்தகங்கள் எங்ஙனம் செலவாகும்? தமிழ்ப்புஸ்தகங்களைத் தமிழர்கள் வாசிப்பதில்லை என்று தடபுடலாய் இந்தப்பண்டிதர் சொல்வது வழக்கம். மேல்நாட்டான் ஒருவன் ஷேக்ஸ்பியரோ அல்லது டென்னிஸனோ ஆகிய இவர்களின் புஸ்தகங்களைப் பதிப்பித்தால், அந்தப்பதிப்பில், கவியின் ஜீவியம், அவர்வாழ்ந்தகாலம், காலத்தின் நிலைமை, நிலைமையினால் கவிக்கு ஏற்பட்ட மாறுதல், கவியின்மனம் முதலிய விஷயங்கள் வெகு நன்றாக எழுதப்பட்டிருக்கும் கவியின் காலம் ஸ்திரமாகத் தெரியாவிட்டால், அவரது நூல்களைக்கொண்டு ஊஹித்து எழுதுவார்கள் மேலும் அந்தக்கவி சொல்வனயாவும் சரியா? தவறா? ஆகிய இவைகளை நன்றாகப்பரிசோதித்து எழுதுவார்கள். அப்படிப்பட்ட பரிசீலனை ஒன்றும் அந்த நாலடியார் பதிப்பில் இல்லை. இந்தப் பண்டிதர் இதுவரை பல நூல்களை இயற்றியுள்ளார். ஆனால் பெருங்கடனாளியாய்விட்டார். ஆங்கிலஞானமில்லாத இவர் இயற்றிய நூல்கள் எங்ஙனம் தற்காலவிஷயங்கள் செறியப்பெற்று ஜனங்களால் விரும்பப்படும்? கிணற்றுத்தவளைகள்போல் இருக்கும் இக்காலத் தமிழ்ப்பண்டிதர்கள் மேல்நாட்டுப் பரிசீலனை முறையைமேற் கொள்ளாவிடில் தமிழ்விருத்தியாக வழியில்லை.

அறிவினும், ஞானத்திலும் விருத்தியடைவதற்குச் சந்தேகமே முதல்படியும் முக்கியமானபடியுமாகும். வாசிப்பவர்களின் மனத்தைக்கலைத்து விபரீத சந்தேகங்களை உண்டாக்காத எந்தப் புஸ்தகமும் சிறந்த வித்வானல் எழுதப்பட்டதன்று. தேர்ந்த அறிவாளியும் ஜனஸமூஹத்துக்கு நல்ல ஊழியத்தைச் செய்ப எண்ணும் அநுபவசாலியும் தான் எழுதும் புஸ்தகங்களைக் கொண்டு ஜனங்களைச் சந்தேகிக்கச்செய்யவேண்டும். ஒருபுஸ்தகத்தை வாசிப்பவன் அதன் ஆசிரியன் கூறும் ஒரு விஷயத்தைக்குறித்துச் சந்தேகித்தால், அதைக்குறித்துப் பூரணமாக அவன் சிந்திப்பான். சிந்தித்தால் அவனுடைய அறிவுவிருத்தியாகும். ஆழ்ந்தசிந்தனையின் காரணமாக அந்தவிஷயம் சரியானதாகத் தோன்றினல் அதனல் அவன் பெரிதும் லாபமடைவான்.

* * * *

"பாநு"வின்பக்கங்களைத் தமிழ்எண்களால் குறிப்பிடுவதைக் குறித்து என் நண்பர்செட்டியார் என்னைப்பார்த்து, "தமிழின் மஹிமை நாளுக்கு நாள் குன்றிவருவது வாஸ்தவம்தான். 'ஞான பாநு' என்னும் பத்ரிகையின் பக்கங்கள் தமிழ் எண்களால் குறிக்கப்பட்டால் அதுமாத்திரம் எவ்விதத்தில் தமிழை உயர்த்திவிடுமோ, தெரியவில்லையே! பத்ரிகையின் பெயரும், அதில் ஆராய்ச்சி செய்யப்படும் விஷயங்களில் பெரும்பாகமும் சம்ஸ்கிருதத்தைச் சார்ந்திருக்க,பக்க எண்கள் மாத்ரம், பெரும்பான்மையோருக்குத் தெரியாதபடி, தமிழில் இருந்து என்ன பிரயோஜனம்?" என்ருர். இவருடைய அபிப்பிராயம் எப்படியாவதுபோகட்டும். நாம் இப்பொழுதுமாறுதல் என்னும் உலகத்தில் வசிக்கிறோம். எல்லா விஷயங்களும் இப்பொழுது மாறுதலையடைகின்றன. ஒருவித முன்னேற்றத்தைக்கருதியே மாறுதல்கள் உண்டாகின்றன. மாறுதலைத் தடுக்க எவனும் முடியாது. கங்காநதியின் பிரவாகத்தை மண்சுவரால் தடுக்க எத்தனிப்பதைப்போல் தான் மாறுதல் முன் எதிர்த்து நிற்றலும். மனித முன்னேற்றத்திற்கு மாறுதல்கள் முக்ய அவசியமாகும்.காலமாகிறபெரும் சமுத்திரத்தில் மாறுதல்கள் இன்றியமையாத அலைகளாம். ஆகவே, "பாநு" அடையப் போகும் மாறுதலில், பக்க எண்கள் மாத்திரமேயன்றி மற்று அதன்சம்பந்தமானயாவும் தமிழாகவே யிருக்குமென்று நம்புகிறேன்.

அவ்வப்போது சில ஆச்சரியமான விஷயங்களை இதில் எழுத வேண்டுமென்று ஒருவர் நமக்குச் சொன்னார். சிலருக்கு அவை சாதாரணமாக விருந்தாலும் பலருக்கு வாசிக்க ஆசையிருக்குமென்று நம்புகிறேன். பெல்ஜியத்திலுள்ள லாம்பெர்ட் கரிச்சுரங்கத்தின் ஆழம் 3490 அடி. உலகத்திலுள்ள மிகப் பெரிய நாடகசாலை பாரிஸிலிருக்கிறது அது மூன்று ஏகரா விஸ்தீரணமுள்ளது. சமுத்திரத்தின் அதிக ஆழம் எட்டேமுக்கால்மைல். ஆடுகளின்வால் மிகவும் பலமுள்ளது. ஐரோப்பாவில் சிலவிடங்களில், மாடுகள் இந்தியாவில் எப்படி வண்டிகளை இழுத்துக் கொண்டு போகின்றனவோ, அப்படியே ஆடுகளும் வண்டிகளை தமது வால்களின் உதவியால் இழுத்துச் செல்லுகின்றன.

*　*　*　*　*

எட்டு வயதுபையனிடம் ஒருகடிதத்தையும் அரையணாவையும் கொடுத்து "கிட்டு! தபாலாபீஸுக்குப்போய் அரையணா தபால் முத்திரை (ஸ்டாம்பு) வாங்கி கடிதத்தில் ஒட்டித்தபால்பெட்டியில் போட்டுவிடு" என்று அனுப்பினேன். அரைமணிநேரம் கழித்து அவன் என்னிடம் வந்து அரையணாவைக் கொடுத்து "தபால் ஆபீஸில் அநேகர் இருந்தனர். சுமார் 50 பேருக்குமேல் இருக்கும். நான் ஒருவருக்குந் தெரியாமல் அந்தக்கடிதத்தைத் தபால் பெட்டியில் போட்டுவிட்டு ஓடிவந்துவிட்டேன். இப்பொழுது நமக்கு அரையணா லாபம்தானே?" என்றான்.

ஸ்வாமிவிவேகாநந்தரின் எதிரொலிகள்-

[ஸ்ரீமாந். எம். ஸி. நஞ்சுண்டராவ் அவர்கள் எழுதியது.]

(முன் தொடர்ச்சி)

அந்தகேவிக்ஷேத்திரத்திலேயே சிறிதுபிரசாதம்வாங்கி உட்கொண்டுவிட்டு அங்கேயே சயனித்துக் கொண்டான். அவனுடைய கனாவில் தேவியானவள் ஒரு பிராஹ்மண சுமங்கலிஸ்திரீயைப் போலத்தோன்றி "குழந்தாய், விசனப்படாதே, ராமதாஸர் என்று ஒருமகான் இருக்கிறார். உன்னை ஈடேற்றுவதற்காகவே அவர்பிறந்திருக்கிறார். அவர் அநுமாருடைய அம்சம். சீக்கிரத்தில் நீ அவரைதர்சிப்பாய். உனது குறைகளெல்லாம் நிவிருத்தியாய்விடும். எழுந்திருந்து அவரைத்தேடிக்கண்டுபிடி" என்று கூறிவிட்டு

மறைந்தாள். ஸிவாஜி விழித்துக்கொண்டு அடக்கவொண்ணுத மகிழ்ச்சியுடன் அந்த க்ஷேத்திரத்தினின்றும் நீங்கிப் புறப்பட்டு ராமதாஸரைத்தேடி அடுத்த கிராமத்திற்குச் சென்று அங்கிருந்த ஸ்ரீராமக்ஷேத்திரத்திற்குள் நுழைந்து ஒருமண்டபத்தில் உட்கார்ந்து தியானஞ்செய்துகொண்டிருந்தான். அம்பொழுது நரசோமலநாதர் என்ற ஒரு சந்நியாசி ஸிவாஜியினிடத்திற்குவந்து, ஸிவாஜி ஆழ்ந்தவிசனத்தில் அழுந்தியிருப்பதற்குக் காரணம் இன்னதென அறிந்துகொண்டு, ஸிவாஜியையும் இன்னுரென்று தெரிந்துகொண்டு ஸ்ரீ ராமதாஸருடைய வரலாற்றைப்பற்றிப் பின் வருமாறு கூறலாயினர்:—

ராமதாஸருடைய பெருமையை எவரால் அளவிட்டு உரைக்க முடியும்? பிராஹ்மண குலத்தில் தோன்றியவர் இவர். இவர்பதினொருவயதுப் பையனுயிருக்கும்பொழுதே இவருக்கு விவாகம் செய்வித்துவிடவெண்ணி இவருடைய பெற்றோர்கள் விவாக நிச்சயம்செய்துவிட்டார்கள். முகூர்த்ததினத்தன்று, பையன் மணப்பந்தலுக்கு இட்டுப்போகப்பட்டான். தமக்கு அருகில் ஒரு அழகிய சிறுபெண் வீற்றிருப்பதைக்கண்டதும் நாராயணன்—இது தான் ராமதாஸருக்குப் பெற்றோர்களால் இடப்பட்டிருந்த பெயர்—திடீரென்று எழுந்திருந்து தவம்செய்வதற்குக் காட்டைநோக்கி யோரேயோட்டமாக ஓடிவிட்டான். கௌதமபுத்தருக்கு அப்புறம் முற்றத்துறந்தவர் இவரே. பன்னிரண்டுவருஷங்களுக்கு இவர் அதிகோடியதபசுசெய்தார். இடைவிடாத ஈஸ்வரசிந்தனைக்கும் ஆத்மஞான அபிவிருத்திக்கும் சாதாரணமாக ஏற்படுகின்ற பெருங்கஷ்டங்களையெல்லாம், பயங்கரமான இடையூறுகளையெல்லாம் இவர் தமது தீவிரதரவைராக்கியத்தினல் ஜயித்துக்கொண்டார். இவர்தமது 23 அல்லது 24-வது வயதில் மாயையைக் கடந்து, ஆத்மாநுபூதியடைந்து, ஜனனமரண சம்சாரபந்தத்தைத் தகர்த்தெறிந்துவிட்டார். இனிமேல் தமக்குவேண்டியது ஒன்றுமேயில்லை யென்றும், தாம்வாழ்வது உலகத்தின் நன்மைக்கே யென்றும், தேசத்தின் நன்மைக்கேயென்றும் நினைத்துக் கொண்டார்.

இதற்குப்பின்னர், ராமதாஸர் பாதக்கண்டம் முழுதும் யாத்திரை செய்யப்புறப்பட்டு ஹரித்துவாரம் முதல் ராமேஸ்வரம் வரையிலுமுள்ள சகலஸ்தலங்களையும் தர்சித்தார். அவர் சென்ற

விடங்களிலெல்லாம் மகம்மதிய அரசாங்கத்தாரால் நேர்ந்திருந்த கொடுமைகளைப் பார்த்துப் பார்த்துப் பாதவித்து அழுதார்; இந்திய ஜனசமுகவீழ்ச்சியைக்கண்டு ஏங்கி ஏங்கிக்கண்ணீர் சொரிந்தார். ஆகையால் இவர்தாம் சென்ற இடங்களிலெல்லாம் மகா பராக்கிரமசாலியாகிய மாருதி (அநுமார்) பகவானுக்குக் கோயில்கள் கட்டவேண்டுமென்றும் உத்தமமான பொதுஜனக்கிளர்ச்சியுண்டாகவேண்டுமென்றும் ஜனங்கள் தங்களுடைய வீழ்ச்சி நிலைமையை உணர்ந்துகொள்ளவேண்டுமென்றும் பாரத தர்மமானது மறுபடியும் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்றும் ஆங்காங்குள்ள ஜனங்களுக்கு போதித்துக்கொண்டே சென்றார். சிலசமயங்களில் இவர் காடாந்தகாரமான வனங்களுக்குள் சென்று குகைகளுக்குள் நுழைந்து கொண்டு பன்னாட்கள் தவம்செய்வதிலேயே காலத்தைக்கழித்து விடுவார்; அவரைச் சுற்றிலும் பலகாட்டுமிருகங்கள் சஞ்சரித்துக்கொண்டேயிருக்கும்; ஆயினும் அவருக்கு எவ்விதத் தீங்கும் செய்யா. சின்னாட்கள் இவர் இங்ஙனம் குகைகளில் வாசம் செய்துவிட்டு தர்மஸ்தாபனத்தின் பொருட்டுப் பெருமுயற்சிகள்செய்ய மறுபடியும் புறப்பட்டு விடுவார். இவ்விதமாக சஞ்சரித்துவருகின்ற ஸ்ரீ ராமதாசர் கூடிய சீக்கிரத்தில் உன்னைப் பார்ப்பதற்கு இங்குவந்து சேர்வார்.

இவ்விதமாக சோமலநாத சந்நியாசி சொல்லிவிட்டுச் செல்லவே, ஶிவாஜி ராமதாஸரையே சதா சிந்தித்துக் கொண்டிருந்தான்; அவரைதர்சனம் செய்து தான் தீரவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டான்; அவரைக் கனவிலாவது கண்டாலொழியத் தான் ஒன்றும் உட்கொள்வதில்லையெனசங்கற்பம் செய்து கொண்டான். அன்றுமுழுதும் உபவாசம் இருந்துவிட்டு, அஸ்தமித்தவுடன் தன்னுடைய சற்குருவின் தர்சனம் தனக்குக்கனவிலாயினும் உண்டாகவேண்டுமென்று பராசக்தியை தியானித்துக்கொண்டே படுத்து நித்திரைசெய்தான். அன்றிரவு அவனுடைய விருப்பப்படியே, தர்சனம் கிடைத்தது; தீவிரதாவைராக்கியமும் ஆத்திரமும் உள்ளவர்கள் அடையமுடியாததும் ஒன்று உண்டோ? ஸ்ரீராமதாஸரானவர் அழகிய நீண்டதாடியுடனும் ராஜகம்பீரமும் முகவசீகரமும் பொருந்திய உயர்ந்த உருவத்துடன் எதிரில் நிற்பதைக்கண்டான். உடனே ஶிவாஜியானவன் ரோமம் சிலிர்க்க, கண்ணீர் பெருக்கி, ஆநந்த பூரிதனாய் அவருடைய

அடிகளில் அடியற்றமரம்போல் விழுந்து நமஸ்கரிக்கவே, ராமதாஸர் அவனுக்கு ஆசிபுகன்று "உன்னுடைய தீவிரதரவைராக்கியத்தையும் உள்ளன்பையும் நான் அறிவேன்; உன்னுடைய ஹிருதய உணர்ச்சிகளையும் நீ இங்குவந்திருக்கும் கருத்தையும் நான் அறிவேன்; உனது அளவற்றதேசாபிமானத்தையும் உன்னுடைய ஜனாபிமானத்தையும் மதப்பற்றையும் பலயீனர்கள், பசுக்கள், பிராஹ்மணர்கள் இவர்களுடைய க்ஷேமத்தைப்பற்றியும் உன்னுடைய ஸ்வதர்ம உணர்ச்சியிலும் உனக்குள்ள ஆக்கிரகத்தையும் நான் அறிவேன். நீ இப்பொழுது உனது ஊருக்குத்திரும்பிச் சென்று உன்னுடைய ராஜ்யபரிவிருத்தியிலும் ஸ்தாபனத்திலும் கவனத்தைச் செலுத்து. நான் சீக்கிரம் உன்னிடத்திற்கு வருகிறேன்." என்று கூறிமறைந்துவிட்டார். பொழுது விடிந்தது; அன்று ஸிவாஜிமுகத்திலிருந்த ஆநந்தக்களையை இத்தன்மைத்தென்று கூற எவராலும் முடியாது. நித்திரை நீங்கிவிழித்தவுடன், ஸிவாஜி தன்னருகில் ஒரு தேங்காய் வைக்கப்பட்டிருந்ததைக்கண்டு, அதைத்தன்னுடைய குருவினுடைய பிரசாதமென்று கருதித்தன்மனைவியினிடத்தில் கொண்டுவந்து கொடுத்தான். பின்னர் சிலநாட்கள் இவன் லௌகிககார்யங்களில் சிந்தனையைச்செலுத்திக்கொண்டிருந்தாலும், இவனுடைய மனமானது சற்குருமூர்த்தியை ஸ்தூலசரீரத்துடன் நேருக்கு நேரேதர்சனம் செய்யவேண்டுமென்ற ஒரே எண்ணத்தைக் கொண்டிருந்தது. ஒருநாள் இவ்வெண்ணமானது இவனைப்பலமாகப் பீடித்து வருத்தவே, மனத்தைச் சிறிதுகலைக்கவெண்ணி. ஸிவாஜி சிலநண்பர்களைக் கூட்டிக்கொண்டு அவ்வூருக்கு அருகாமையிலுள்ள ஒரு காட்டிற்கு வேட்டைக்குப் புறப்பட்டான்.

(வரும்.)

புத்தகவரவு.

1. ஜடாவல்லவர்:—இது பிரஹ்மஸ்ரீ வாகவி. திரு. அ. சுப்பிர்மணிய பாரதி யவர்களால் இயற்றப்பெற்ற ஒரு அருமையான சரித்திரம். இதில் நவீனக்கல்வியினால் உண்டாகும் கெடுதிகள், நமது பூர்வாசார அநுஷ்டானத்தினால் விளையும் நன்மைகள், சேவகத்தொழிலின் இழிவு, மாமிக்கும் மருமகளுக்கும் உண்டாகும் சச்சரவுகள் முதலியவை வெகு நன்றாக, எளிய நடையில்

எழுதப்பட்டிருக்கின்றன. இப்பொழுது வந்திருப்பது இப்புத்தகத்தின் இரண்டாவது பதிப்பு. ஆங்கிலக்கதைப் புத்தகங்களையப்படியே மொழிபெயர்த்து ஐரோப்பிய நடையுடை பாவனைகளை நமது ஜனசமூகத்தில் புகுத்தத் துணிந்திருக்கும் புலவர்கள் பெருகிவருகின்ற இக்காலத்தில், ஜடாவல்லவர் போன்றகதைகள் அநேகம் வெளிவந்தால்தான், நமது ஜனசமூகம் ரட்சையடையும் என்பது நமது உண்மையான அபிப்பிராயம். இதன் விலை ரூபா 1—8—0.

2. கர்நாடக யோகினிக் கதை:—இது சிறுபிள்ளைகளுக்கு வேடிக்கையாயும் ஆனால் அநேக நீதிகளைப்புகட்டக் கூடியதாயுமுள்ள பலகதைகள்சேர்ந்தஒரு சிறுபுஸ்தகம். விலை அணா நான்கு.

3 ஸ்ரீமதி:—அம்பரீஷ ராஜனுடைய புத்திரியாகிய ஸ்ரீமதியென்பாள் பக்திமிகுந்து, தன்னைமணம்புரிய விரும்பிய நாரதர், பர்வத முனிவர் இருவரும் குரங்கு முகத்தினராயிருக்கக்கண்டு அவர்களை மணம்புரியாமல் பக்திமகிமையால் சாட்சாத் பகவானையேமணம்புரிந்துகொண்டாளென்று இக்கதை கூறுகின்றது. குழந்தைகளுக்கு ஈஸ்வரபக்திபுண்டாவதற்கு இது ஒரு நல்லகதை. விலை ரூபா 0—1—6.

4. திருச்செந்தில் வெண்பாவந்தாதி:—இது நூறுபாடல்களடங்கிய சுப்பிரமணியஸ்வாமி ஸ்தோத்திரம் விலை அணா ஒன்று.

சுப்பிரமணியர் தோத்திரக் கோத்து:—தமக்கு நேர்ந்தபிணி நீங்கும்பொருட்டு ஒரு மாதினால் பாடப் பெற்றபாடல்கள்; இதனைப்பாராயணம்பண்ணுவோருக்கு உடற்பிணியேயன்றி உள்ளப்பிணியும் நீங்குமென்று சொல்லலாம்; பாடல்கள் அவ்வளவு அழகாயும் நன்றாயும் இருக்கின்றன. காகிதக்கட்டடம்—விலை அணா மூன்று; துணிக்கட்டடம், விலை அணா ஐந்து.

இவ்வைந்து புத்தகங்களும் சென்னை திருவல்லிக்கேணி, ஸ்ரீ பாலசுப்பிரமணியம் புத்தகவியாபாரிகளிடம் கிடைக்கும்.

மாதா:—இது, இந்தியா வென்னும் வாரப்பத்திரிகைக்கு ஆசிரியராயிருந்தவரும் தேசபக்தசிரேஷ்டருமான ஸ்ரீ மான். சி. சுப்பிரமணியபாரதியவர்களால் இயற்றப் பெற்ற அநேக பாட்டல்கள் அடங்கிய ஒருநூல்; வெற்றி, வெண்ணிலா, பாரதமாதா திருப்

பள்ளியெழுச்சி, ஜாதீயகீதம் முதலியபதினைன்கு பகுதிகளையுடையது. சிலவருஷங்கட்கு முன் இவ்வாசிரியர் பாடிய தேசகீதங்களின் அருமையையும் பெருமையையும் தமிழரில் அறியாதார் இரார். அதுபோன்றே இதுவும் படிப்பவர்கட்கு உள்ளக் கிளர்ச்சியையும் பூரிப்பையும் உண்டாக்கு மென்பதில் சந்தேகமில்லை. ஒவ்வொரு தமிழரிடத்திலும் இருக்கவேண்டிய நூல் இது. வேண்டுவோர் ஸ்ரீமாந். சி. சுப்பிரமணியபாரதி, புதுச்சேரி என்ற விலாசத்திற்கு எழுதிக்கொள்க.

பெண்கள் நீதிவிளக்க வினவிடை:—இப்பெயர்கொண்ட தோர்சிறியப்புத்தகம் ஸ்ரீமாந். மயிலாப்பூர் குப்புசாமிநாயகாவர்களால் இயற்றப்பட்டு நமது பார்வைக்குவந்திருக்கிறது. பெண்கள் தமது தர்மநிலைகெட்டு, சிருஷ்டி நீதிக்கு விரோதமாக ஆண்மையடையும்படியாகக் கல்வியும் சீர்திருத்தங்களும் பரவிவரும் இக்காலத்தில் பெண்களின் ஸ்வதர்மமாகிய பெண்மையைப் போதிக்கப்புறப்பட்ட இந்நூல் தமிழுலகுக்கு ஓர் நல்வரவாகும். புருஷர்களுக்குப் பெண்மைபெருதுவதும் ஸ்திரீகள் ஆண்மையடைவதும் தற்காலதர்மங்களாயிருக்கின்றன. இவை சிருஷ்டி நீதிக்கு விரோதங்களாம். சிருஷ்டி நீதிக்குவிரோதமான கொள்கைகளும் செயல்களும் எப்பொழுதும் துன்பத்தையும் துக்கத்தையுமே உண்டாக்குவனவென்பது திண்ணம். ஆதலால் ஒவ்வொருவருக்கும் அவரவருடைய ஸ்வதர்மங்களை யெடுத்துக்காட்டுவது அவசியமாயிருக்கின்றது. இச்சிறிய புத்தகத்தில் பெண்களுடைய தர்மங்கள் இன்னவையென்று எடுத்துக்காட்டியதற்காக நாம்ஸ்ரீமாந். நாயகரவர்களிடத்தில் நன்றிசெலுத்தக்கடமைப்பட்டிருக்கிறோம். இதன் விலை அணு 4.

விஷ்ணு ஸ்தலமஞ்சரி:—பாரதக்கண்டத்திலுள்ள விஷ்ணு ஸ்தலங்களின் புராணவரலாறு, உற்சவகாலங்கள், மார்க்கம், வசதிகள் முதலியவற்றைப் பற்றிச் சுருக்கமாகத் தொகுத்துக்கூறும் இந்நூல் யாத்திரீகர்களுக்கு மிகவும் பிரயோசனகாமானதே. இதன் விலை அணு 8.

கலாசிந்தாமணி:—இப்பெயர் பூண்டமாதாந்தப்பத்திரிகையின் முதற்புத்தகம் நான்கு சஞ்சிகைகள் வரப்பெற்றோம். இதன் பெயருக்கேற்றபடி பலஅரியபெரிய விஷயங்கள் அடங்கப் பெற்

றுள்ளது. வருஷச்சந்தா ரூபாய் ஒன்றே. வேண்டுவோர், பத்திராதிபர், கலாசிந்தாமணி கார்யஸ்தலம், மைலாப்பூர், சென்னை என்ற விலாசத்திற்கு எழுதிக்கொள்க.

வேதாந்தம், பஹிரங்க ரஹஸ்யம் என்றபெயர்களுடன் கூடிய இரண்டு சிறியபுத்தகங்கள் சிவகங்கை ஸ்ரீ ராமகிருஷ்ண விவேகாநந்தவேதாந்த சங்கத்தாரிடமிருந்து வரப்பெற்றோம். இவ்விரண்டும் ஸ்ரீ விவேகாநந்த ஸ்வாமிகள் ஆங்கிலத்தில் செய்த இரண்டு பிரசங்கங்களின் மொழிபெயர்ப்புக்களாகும். ஸ்வாமிகளுடைய பிரசங்கங்களையும் எழுத்துக்களையும் தமிழில், மொழிபெயர்த்துச் சிறுசிறு புத்தகங்களாகப் பிரசுரித்து எளியவர்களும் வாங்கிப்படிக்கும்படி மிகவும் சொற்பவிலையிட்டுப் பரப்பவேண்டுமென்பது நமது அந்தரங்க ஆசை. மேற்படி சிவகங்கைவேதாந்தசங்கத்தாருக்கும் இந்த ஆசையிருக்கிறதென்று தோன்றுகிறது. இவர்கள் இதற்கு முன்னமேயே மூன்று அணவிலையிட்டு "என் குருநாதன்" என்னும் புத்தகத்தையும் 9 பைசா விலையிட்டு ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்சரின் குணவைபவம்" என்னும் புத்தகத்தையும் பிரசுரித்திருக்கிறார்கள். இத்தகைய உத்தமமானமுயற்சிகள் செய்யமுன்வந்திருக்கும் இவர்களுக்கு தமிழுலகம் நன்றி பாராட்டக்கடமைப்பட்டிருக்கிறது. ஸ்வாமிகளுடைய பிரசங்கங்களனைத்துமே அற்புதமான அமிருதசமானவாக்குக்களாயினும், அவர் லாகூரில்செய்த "வேதாந்தம் என்ற பிரசங்கமானது மிக மிகச்சிறந்தது என்பதில் சந்தேகமேயில்லை. இப்பொழுது வெளிவந்திருக்கும் இதன் தமிழ்மொழி பெயர்ப்பு விலை அணு நான்கு; 'பகிரங்கரகஸ்யம்' விலை அணு ஒன்று. வேண்டுவோர் சிவகங்கையில்மேற்படி சங்கத்துக்கார்யதரிசிக்கு எழுதிக்கொள்க.

கல்வி:—இப்பெயர்கொண்ட சிறிய புத்தகம் ஒன்றாங்கூன், மங்கமாரி வீதியில் 111-ம் இலக்கமிட்ட கட்டடத்திலுள்ள நவீன கதாபுத்தகசாலையாரால் கேட்பவர்களுக்கு இலவசமாகக் கொடுக்கப்படுகிறது. கல்வியின் ஆவசியகமும் பெருமையும் பயனும் இதில் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன.

பெங்களூர் எ. எஸ். எ. மாந்திரீகவைத்திய சாலையினின்றும் இவ்வருஷத்திய மாதத்தேதிக்குறிப்பு (காலண்டர்) ஒன்று வரப்பெற்றோம். இதில் மாந்திரீகப்புலியின் உருவமும் பஞ்சாட்சரச்சக்கரமும் வரையப்பட்டிருக்கின்றன.

ஜீவகாருண்யம்.

[பிரஹ்மஸ்ரீ ராமச்சந்திர சாஸ்திரிகள் எழுதியது.]

சென்ற மாதத்து "பாரு"வில் தலையங்கமாக வெளி வந்த ஜீவகாருண்யம் என்ற விஷயத்தைப்பற்றி நானும் சில சொல்ல விரும்புகின்றேன். ஜீவகாருண்ய சித்தமில்லாத எவனும் பிறரிடத்திலிருந்து அநுதாபத்தையாவது அன்பையாவது பெறுதற்குத் தகுதியுடையவனல்லன். ஜீவகாருண்ணியமில்லாதவனை மனித வகுப்பிற் சேர்ப்பதற்குக்கூட ஆன்றோர் அஞ்சுகின்றனர். மாம்சத்தை இச்சித்துப் புசிக்கும் மாமிசப் பிண்டங்கள் இப்பொழுது அதிகரித்து வருகின்றன. ஆத்ம வஸ்துவை அறிவினால் பெருக்க வேண்டுமென்ற உள்முக நாட்டம் நீங்கி, மாம்சத்தை மாமிசத்தினால் பெருக்க வேண்டுமென்ற பகிர்முக நாட்டமே இப்பொழுது மிகுந்து வருகின்றது. மாமிச போஜனம் நமது மதத்தில் நிராகரிக்கப்பட்டிருந்தால், நமது முன்னோர்களுடைய யுக்தியில் இதுமகாகொடுமையான காரியமென்று தோன்றியிருந்தால், அநுபவத்தில் கேடுகளை விளைவிக்கின்றதென்று தெரிந்திருந்தால், பிராஹ்மணர்கள்—அதுவும், சகல வேத சாஸ்திர சம்பன்னர்கள்—யாகம் செய்வார்களா? மற்றைய ஜாதியார் தேவி க்ஷேத்திரங்களிலும் மற்றும் ஆயிரக்கணக்கான ஆடு, கோழிகளை பலியிடுவார்களா? என்று சில கேள்விகள் உதிக்கின்றன. இதற்கு விடை பகரவேண்டியது அத்தியாவசியமாயிருக்கின்றது.

நமது இதிகாச புராணாதிகளைப் பார்த்தால், இதற்குமுன் இப்பூமியில் நரமேதயாகம், அஸ்வமேதமாகம், கோமேதயாகம் முதலியவை யெல்லாம் நடைபெற்று வந்தனவெனத் தெரிகிறது. இப்பொழுது அவையெல்லாம் நின்றுவிட்டன. ஆதலால் இந்த யாகங்கள் ஆரம்பிக்கப்பட்ட காரணத்தை நாம் சிறிது ஊன்றிப் பார்ப்போமாயின், ஜீவவதை செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டனவாக நமக்குத் தோன்றுது; ஆனால் ஆசுரச்செய்கையாகிய ஜீவவதையை நிறுத்த வேண்டுமென்ற ஆழ்ந்த கருத்துடனேயே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. உலகமானது குழந்தைப் பிராயத்தில் இருந்தபொழுது, மனிதர்கள் மனிதர்களாயிராமல் மானிட மிருகங்களாயலைந்து கொண்டிருந்தார்கள்,

அப்பொழுது அவர்கள் அந்நியோந்நிய சகோதர பாவம் சிறிது மின்றி, அன்பென்றால் இன்னதென்றே யறியாது 'பலவான் காரியம் ஜயம்' என்னும் பழமொழிக்கிணங்க தங்களுக்குள்ளேயே ஒருவரை யொருவர் அடித்துத் தின்று கொண்டிருந்தார்கள்; அப்பொழுது சில ஜீவகாருண்ணிய ஸ்வரூபிகள்—ஜீவகாருண்ணிய சீலர்கள் சிலர் எப்பொழுதும் இருந்துகொண்டே யிருக்கிறார்கள்—இவ்வக்கிரமத்தைப்பார்க்கசகியாதவர்களாய்மனங்கொதித்து வருந்தினார்கள். ஆனால், வெகுநாட்களாகத் தடப்பாரில்லாமல் அநுஷ்டிக்கப்பட்டு வந்த வழக்கத்தை அப்பொழுது துர்வழக்கமென்று சொல்லி யடியோடு விட்டுவிட வேண்டுமென்றால், ஜனங்கள் கேட்பார்களா? இப்படிச் சொல்லத் துணிபவர்களையே பட்சித்து விடுவார்களன்றோ? ஆதலால் அப்பெரியோர்கள் ஜனங்களை நோக்கி, "உங்களுக்குள்ளேயே ஒருவரை யொருவர் அடித்துத் தின்பது அடாத காரியம். ஆனால் நீங்கள் பலரும் ஒற்றுமையாகச் சேர்ந்து கொண்டு எவனையாவது ஒருவனைக்கொன்று ஈஸ்வரனுக்குச் சமர்ப்பணம் செய்து நிவேதித்துப் பின்னர் தின்றால் உங்கள் அனைவருக்கும் அளவற்ற புண்ணியம் உண்டு," என்று போதித்ததுமன்றியில் இன்னின்ன தினங்களில் தான் மாம்சம் புசிக்கலாமென்றும் இப்படிக் குறிப்பிட்ட காலங்களில் புசித்தால் அது பாவமில்லையென்றும் மற்ற காலங்களில் புசிப்பது பாபமே யென்றும் கூறி வரையறையின்றி வயிறுகொண்டமட்டும் தின்று கொண்டிருந்த மாமிச போஜனத்திற்கு வரையறை ஏற்படுத்தினார்கள். அக்காலத்து மனிதர்கள் அநாகரிகர்களேயாயினும் ஆஸ்திகர்களா யிருந்தார்கள்; ஈஸ்வரபயமுள்ளவர்களா யிருந்தார்கள். ஆதலால் ஈஸ்வரனை முன்னிட்டு சிலசிறு விதிகள் ஏற்படுத்தப்பட்ட பொழுது, அவர்கள் அவற்றிற்குக் கீழ்ப்படிந்தார்கள். இங்ஙனம் சின்னாட்கள் செல்ல, ஆன்றோர் அத்தகைய சுபதினங்களை இன்னும் அபூர்வமாக்கினார்கள், இதனுடன் மெல்ல மெல்ல அறிவையும் பரப்பினார்கள். பன்னாட்கள் சென்றன; பிறகு ஆன்றோர் ஜனங்கள் முன்னினும் அறிவில் விருத்தி யடைந்திருப்பதை யறிந்து அவர்களை நோக்கி "மனிதர்க ளெல்லோருக்கும் காசாணுதி அவயங்களும் அறிவும் சமமாகவே யிருக்கின்றன. ஆதலால் மனிதரை மனிதர் கொன்று தின்பது நியாயமானதாகத் தோன்றவில்லை. உங்களுக்குள்ளேயே நீங்கள் வேற்றுமை ஏற்படுத்திக் கொள்வது தப்பு" என்று பலவாறு போதித்து "நல்ல

அழகிய குதிரையை இன்னின்ன தினங்களில் இன்னின்ன சந்தர்ப்பங்களை முன்னிட்டுக்கொண்டு யாகம்செய்து ஈஸ்வரனுக்கு நிவேதித்துப் பின் தின்றால் கோடாநுகோடி புண்ணிய பலன் உண்டு" என்று உபதேசித்தார்கள். உலக உத்தாரணத்தின் பொருட்டு உபதேசித்த இப்பெரியோர்கள் குதிரை மாமிசத்தைத் தாங்களும் தின்றிருப்பார்கள்; இவர்கள் தின்றால்தானே சாதாரண ஜனங்கள் இவர்களுடைய வார்த்தைகளில் மதிப்பு வைப்பார்கள். இங்ஙனம் அஸ்வமேதயாகமானது செய்யப்பட்டு வந்தது. அநேக நாட்கள் சென்றபின், பெரியோர் "குதிரைகள் நமது தேசத்தை அந்நியர்களுடைய படையெடுப்பினின்றும் ரட்சிப்பதற்காக யுத்தம் நேரிடும் சமயங்களில் உபயோகிக்கத் தக்க, இன்றியமையாத மிருகங்கள்; ஆதலால் அவற்றை நாம் கொன்று தின்பது நல்லதன்று." யென்று போதித்து, அதற்குப் பதிலாகப் பசுக்களைக் கொன்று யாகம் செய்து தின்றால் மோட்சம் உண்டென்று கூறினார்கள், உடனே ஜனங்கள் கோமேதயாகத்தைப் பின்பற்றினார்கள்.

இங்ஙனம் அநேக ஆண்டுகள் ஆயின. பின்னர், ஆன்றோர் "நமக்குப் பால் முதலியன தந்து தாய்போல் நின்று நமக்கு எல்லாவிதத்திலும் உதவி செய்கின்ற பசுவைக்கொன்று தின்பதினும் அற்பப் பிராணிகளாகிய ஆடுகளைக் கொன்று யாகம்செய்து தின்னுதலே ஈஸ்வரனுக்குப் பிரியமாம்" என்று கூறினார்கள். மெல்ல மெல்ல அறிவு மேம்பட்டு வந்ததனால் ஜனங்கள் சிறிது சிறிதாக உணர்ச்சியடைந்தார்கள். இப்பொழுது இவ்வாடுகளையும் கொன்று யாகம்செய்வது கூடாதென்று ஆன்றோர் கூறியிருக்கின்றனர். இதற்கு உதாரணமாக, இக்காலத்தில் யாகம்செய்யும் மாத்வப்பிராஹ்மணர்கள் ஆடுகளைக் கொலை செய்யாது, ஆடுகளைப்போல மாவினால் உருப்பிடித்து அதை நிவேதனம் செய்துசாப்பிடுகின்றார்கள். நமது தேசத்தில் யாகங்கள் இவ்விதமாக ஏற்பட்டன. இப்பொழுது நாம் முன்னினும் பல சீர்திருத்தங்களடைந்து அன்பு மிகுந்தவர்களாயிருக்கின்றோம். இப்படியே தான் மற்ற ஜாதியார் பலியிடுகின்ற குரூர வழக்கங்களும் ஆதி காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு இப்பொழுது ஆடு, கோழிகளைக் கொல்வதில் வந்து நிற்கின்றன. சர்வ வியாபகவஸ்துவாகிய ஈஸ்வரனுக்கு சமஸ்தகோடி ஜீவராசிகளும் காசாணுகி அவயவங்களைப் போன்றனவன்றோ?

நாம் நம்முடைய காலையோ, கையையோ நாமே கடித்துத்தின்று கொள்வதற்குச் சம்மதிப்போமா ? அதுபோலவே, தம்முடைய சரீரத்தின் வெவ்வேறு உறுப்புக்களைத் தின்பதற்கு ஈஸ்வரன் ஒருபொழுதும் பிரியப்படமாட்டா ரென்பது நிச்சயம்; அப்படி ஒரு கொலை பாதக ஈஸ்வரன் யிருந்திருந்தாராயின், இப்பொழுது அவர் அந்த ஈஸ்வர ஸ்தானத்தில் இல்லையென்பதும் நிச்சயம். ஜீவவதையை நிறுத்தும் நோக்கத்துடனேயே, யாகங்கள் ஏற்படுத்தப்பட்டன. அறிவுபெருகப்பெருக, அன்பும் பெருகிற்று; ஜீவவதையும் நின்றுவிட்டது; யாகங்களும் அநேகமாக நின்று விட்டன. யாகத்தில் செய்தாலும் சரியே, போகத்தில் செய்தாலும் சரியே, ஜீவவதையானது சண்டாளச் செய்கை யென்பதில் சந்தேகமில்லை.

பிழைதிருத்தம்.

தை மாசத்து "ஞானபாநு" வின் 266-வது பக்கம் 17-வது வரியில் 'மால்தஸ்' என்ற பதத்திற்குப்பின் என்பவர் தமது "ஜனத்தொகை" என்ற மொழிகளைச் சேர்த்து வாசிக்க.

"விஸ்வாமித்ரர்."

இனும் ரூபாபத்து.

தனித்தமிழில் திருவள்ளுவ நாயனருடைய சரித்திரத்தை யாவது தமிழ்ப்பாஷையின் சிறப்பைப்பற்றியாவது எழுதுவோருக்கு இனும் ரூபாபத்து கொடுப்பதாக நாம் விளம்பரம் செய்ததற்கிணங்க, ஏழுவியாசங்கள் நமக்கு வந்தன. ஆறு வியாசங்களில் வடமொழிச்சொற்கள் ஏராளமாகவும் தாராளமாகவும் கலக்கப்பட்டிருக்கின்றன. மிகுதி ஒன்றிலும் ஒரேயொரு சொல் வடமொழிச்சொல்லின் திரிபுச்சொல் என்று நாம் அபிப்பிராயப்படுவதினால், இச்சந்தேகத்தை நிவிர்த்திசெய்து கொள்ளுமாறு நாம் இப்பதத்தைச் சில தமிழ்ப்புலவர்களுக்குத் தெரிவித்து அவர்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்டிருக்கிறோம். ஆதலால் அவ் வியாசம் தவிர, மற்ற வியாசங்களெல்லாம் வியாசகர்த்தாக்களுக்குத் திருப்பியனுப்பப்படும். இவ்வொரு வியாசத்தைப்பற்றிய தீர்மானம் மேது அடுத்த பத்திரிகையில் தெரிவிக்கப்படும்.

இதுவே முக்தி மார்க்கம்.

பந்தத்தினின்றும் விடுபட்டுப் பரமானந்தப் பிராப்தியாகிய முக்தி நிலையை அடையவிரும்பி, சமஸ்தகோடி ஜீவராசிகளும் தெரிந்தோ, தெரியாமலோ முயற்சித்துக்கொண்டிருக்கின்றன வென்பது உண்மையாம். இம்முக்திப் பிரதேசத்தை யடையும் பொருட்டே எல்லா ஜீவராசிகளும் இப்பிரபஞ்ச யாத்திரை செய்துகொண்டிருக்கின்றன வென்பது நிச்சயமாயினும், பல சுகமான சுற்று வழிகளில் புறப்பட்டு அநந்தங்கோடி ஜன்மங்கள் எடுத்துத் தவிக்கின்றன; சில குறுக்கான நேர்வழிகளில் செல்கின்றன. இக்குறுக்கு நேர்வழிகள் முன் சென்றுள்ள முதறிஞர்களால் நன்றாகச் செப்பனிடப்பட்டுள்ளதேயாயினும் பல செங்குத்தான மலைச்சிகரங்களின் மீதேறியும் பயங்கரமான புதர்கள் அடர்ந்த, இருள் செறிந்த காடுகளினூடேயும் செல்கின்றன. இத்தகைய குறுக்கு நேர்வழிகளில் ஒன்றை நாம் இப்பொழுது முக்கியமாகக் குறிப்பிடுகின்றோம். பற்றுதல்கள் அற்றுப் பகவானைப் பற்றிக் கொள்ளுதலே பரிசுத்தமான மார்க்கமாகும். அற்பமும் அபிமானமின்றி, சொற்பமும் பற்றுதல் இன்றி முற்றத்துறந்தாலே, ஒரு மயிரிழையேனும் ஒட்டுதலின்றி உலகத்தை விட்டு விட்டாலே, பரமேஸ்வரனைப்பற்றிக் கொள்ளுதற்கும் பரமேஸ்வரனுடைய அருளை யடைவதற்கும் பாத்திரமாகலாம். துரியோதனனுடைய சபையில் திரௌபதியை மானபங்கம் செய்வித்து துற்சாதனன் துகிலுரிந்த பொழுது, அவள் ஒரு கையினால் தனது வஸ்திரத்தைப் பிடித்துக்கொண்டு, மற்றக்கையை உயரத்தூக்கி. "ஏ, கிருஷ்ணா! துவாரகாபுரிவாசா!" என்று பிரலாபித்தபொழுது ஸ்ரீகிருஷ்ணன் துவாரகையிலேயே தனது வேலையைப் பார்த்துக்கொண்டிருந்து விட்டார். சிறிது நேரம் கழித்து, துற்சாதனன் இழுத்துத் துகிலுரிகின்ற அக்கிரமத்தைச் சகிக்கும் ஆற்றலற்றவளாய், கையினால் பிடித்திருந்த வஸ்திரத்தை விட்டு விட்டு அந்தக் கையையும் உயரத்தூக்கிக்கொண்டு 'ஏ, கிருஷ்ணா, ஆபத்பாந்தவா, அநாதைரட்சகா, ஹிருதய கமலவாசா," என்று கதறியவுடன், ஸ்ரீகிருஷ்ணன் அவளுடைய ஹிருதயத்திற்குள் வந்து நுழைந்துகொண்டு துற்சாதனனுடைய கைசலிக்கும்படியாக, துகிலை வளர்த்திக்கொண்டே யிருந்தார். ஆதலால் ஈஸ்வரன் எப்பொழுதும் நம்மிடத்திலேயே இருக்கிறார்

என்ற திட நம்பிக்கையுடன் ஈஸ்வரனைத்தவிர, மற்ற விஷயங்களில் நாம் பற்றுதல்களற்றவர்களாய் விடுவோமானல், நமக்குப் பயமில்லை, கவலையில்லை, துன்பமில்லை, துக்கமில்லை. நாம் களங்கமின்றி, கள்ளங் கபடின்றி, ஈஸ்வரனை நம்பி விடுவோமானல், நமது பக்கத்தில் எப்பொழுதும் கைகட்டி நிற்பதற்கு ஈஸ்வரன் தயாராகக் காத்துக்கொண்டிருக்கிறார். ஈஸ்வரனை நம்பி எல்லாவற்றையும் விட்டு விட்டவர்களை ஈஸ்வரன் ரட்சிக்காமற்போனல், அந்தப் பழி பாவம் ஈஸ்வரனைச் சேருமல்லவா ? ஈஸ்வரன் பழி பாவங்களுக்கு அஞ்சுகிறார்; நம்பிக்கைத் துரோகமென்றால் நடுங்குகிறார். இத்தகைய உத்தம லட்சணங்களைக் கொண்டுள்ளாராதலால் தான் அவர் எல்லாம் வல்ல ஈஸ்வரனென்று அழைக்கப்படுகிறார். பொய்மையும் குற்றமும் நம்மிடம் பொருந்தியிருப்பதால் தான், நாம் செத்தும் சாகாமலும் ஜகத்தில் சிக்குண்டு தியங்கித் தவிக்கின்ற ஜீவர்களாயிருக்கின்றோம்.

தஞ்சாவூரில் பெரியதாஸர் என்றொருவர் பக்த சிரேஷ்டர் இருந்தார். அவ்வூரரசன் ஒருநாள் அவரை வரவழைத்து “ஈஸ்வரன் எவ்வளவு தூரத்திலிருக்கிறார்?” என்று கேட்க, பெரியதாஸர் “கூப்பிடு தூரத்திலிருக்கின்றார்” என்றாராம். திரௌபதி “துவாரகாபுரி வாசா,” என்று கூப்பிட்டபொழுது கிருஷ்ணன் துவாரகையிலேயே யிருந்தார்; “ஹிருதய கமலவாசா” என்று கூப்பிட்ட பொழுது, கிருஷ்ணன் அங்கு அவளிடத்திலேயே வந்துவிட்டார். நாம் அவரை எவ்வளவு தூரத்தில் வைத்துக் கூப்பிடுகிறுமோ, அவர் அவ்வளவு தூரத்திலிருந்து கொண்டு “ஏன்?” என்று கேட்கிறார். ஆதலால் நாம் ஈஸ்வரனை நம்மிடத்திலேயே வைத்துக்கொண்டு, மற்ற வஸ்துக்களின் மேலுள்ள பற்றுதல்களையெல்லாம் உதறியெறிந்துவிட்டு, அவரையே பற்றிப்பிடித்து நின்றால், இதுவே முக்திக்கு மார்க்கம் என்பதில் ஐயமில்லை. இதுவே சுலபமான வழி. ஆனல் மிகக்கடினமான வழி; இவ்வழியில் செல்வோர் முத்திநிலையை யடையரென்பது திண்ணம்.

சமாச்சாரக் குறிப்புகள்.

ஸ்ரீ விவேகாநந்த ஸ்வாமிகளின் பிறந்தநாட் கொண்டாட்டம் வெகு சிறப்பாக நடைபெற்றது. இந்திய ஜனங்களுக்குத் தன்மதிப்பை யுண்டுபண்ணியுவர் ஸ்ரீவிவேகாநந்தரே. இவர் சாதாரணப் பொது ஜனங்களுக்குள் அறிவைப் பரப்பவேண்டுமென்று ஆத்திரமும் அன்பும் மிகுந்திருந்தார். ஸ்ரீ புத்தர் தேவ பாஷையாகிய சமஸ்கிருத பாஷையில் பேசாது, பொது ஜனங்களுடைய சாதாரணப்பாஷையிலேயே போதித்தார் என்னும் ஒரு நியாயமே ஸ்ரீ புத்தர் பொது ஜன நன்மையின் பொருட்டுத் தோன்றிய வொரு அவதார புருஷர் என்பதற்கு ஒரு சான்று என்று ஸ்ரீவிவேகாநந்தர் கூறியுள்ளார். இப்பொழுதோ, இவருடைய பிறந்தநாட் கொண்டாட்ட சமயங்களில் முக்கிய பிரசங்கமானது ஆங்கிலத்தில் நடைபெறுகின்றது. சென்னையில் சமீபத்தில் நடந்தேறிய கொண்டாட்டத்தின் பொழுது, ஆங்கிலம் அறியாத ஜனங்கள் நூற்றுக்கணக்காக வந்திருந்தார்கள்; அவர்கள் ஸ்ரீ ரங்கத்திலிருந்து வந்திருந்த வைத்திய நிபுணர் ஸ்ரீமாந். ராஜன் அவர்களுடைய அற்புதமான பிரசங்கத்தைக் கேட்டு ஆநந்திக்க முடியாது, வீடு நோக்கி விசனத்துடன் சென்றார்கள் என்பதை நாம் அறிவோம். இப்பிரசங்கமெல்லாம் தமிழில் நடைபெற்றால் நன்றாயிருக்கும். வருஷந்தோறும் பிரசங்கம் செய்பவர்களும் பிரசங்கம் கேட்க வருபவர்களும் ஆங்கிலர்களா யில்லாமல் தமிழர்களாகவே யிருந்தும், பிரசங்கங்கள் ஆங்கிலத்தில் நடைபெறுவதும் ஒரு மாயைதான். இந்தமாயையை இனிமேலாவது ஸ்ரீராமகிருஷ்ண மடத்தினர்களும் அவர்களுடைய அபிமானிகளும் ஜெயித்து விடுவார்களென்று நம்புகிறோம். ஆங்கில பாஷையில் நடக்கின்ற பிரசங்கமும் எழுதித்தானே வாசிக்கப்படுகிறது; தமிழ்ப்பாஷையிலும் நன்றாக எழுதி வைத்துக்கொண்டு வாசிக்கலாமே. இதுகாறும் தமிழில் பிரசங்கங்கள் செய்யவேண்டும் என்ற எண்ணம் உதிக்கவில்லையென்று ஷை மடத்தினர் கூறுவாராயின், இனிமேலாவது தமிழில் பிரசங்கங்கள் நடப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நாம் அவர்களைப் பன்முறையும் பணிந்துகேட்டுக் கொள்கிறோம்.

* * *

காசியில் ஹிந்து சர்வகலாசாலை என்று ஒரு சர்வகலாசாலை ஸ்தாபிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்யப்பட்டு, நமது ராஜப்பிரதிநிதியவர்களால் சமீபத்தில் அதற்கு அஸ்தி

வாரக்கல் நாட்டப்பட்டது. அச்சமயத்தை முன்னிட்டு இந்தியா தேசத்தில் பற்பல இடங்களிலுமுள்ள அநேகசாஸ்திரக்ஞர்களும் பண்டிதர்களும் வந்து அநேக பிரசங்கங்கள் செய்தார்கள். இந்த சர்வகலாசாலையில் கல்வியானது ஹிந்துமத தர்மங்களை அஸ்திவாரமாகக்கொண்டு கற்பிக்கப்படும். தர்பங்கா மகாராஜா அவர்களும் பண்டிதர் மதனமோஹன மாளவியர் அவர்களும் இவ்விஷயத்தில் எடுத்த சிரத்தை வீண்போகவில்லை. ஹிந்துமதத்திற்கு இனிமேல் நற்காலம் போலும்! அப்படியாயின் ஹிந்து ஜன சமுகத்திற்கும் நற்காலமே.

* * *

திருட்டு உலகில் ஸ்வபாவமாகிவிட்டது. பட்டப்பகலில் கொள்ளையடிக்கின்ற பக்காத்திருடர்களின் செய்கையைப் பற்றி நாம் கூறவரவில்லை. சில்லரைத்திருட்டையே இங்கு குறிப்பிடுகிறோம். பக்காத்திருடர்களிடத்தில் பார்க்கிலும் சில்லரைத் திருடர்களிடத்திலேயே நமக்குப் பயம் அதிகம். பக்காத்திருடர்களுடைய செய்கை அயோக்கியமானதேயாயினும், அவர்கள் பட்டப்பகலில் வருகின்றனர். நாம் சிலர் ஒன்று சேர்ந்து அவர்களைத் துரத்திவிடலாம், அல்லது பிடித்துவிடலாம். சில்லரைத்திருடர்கள் கண்களில் தென்படவே மாட்டார்கள். ஆனால் இவர்கள் செய்யும் திருட்டுச் செய்கைகளோ பொறுத்தற்கரியன. கூட்டங்களில் முடிச்சவிழ்ப்பதையும் கத்தரிக்கோல் போடுவதையும் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். இப்பொழுதோ சில்லரைத் திருட்டுக்கள் புதியனவாகப் பெருகிவருகின்றன. சமீபத்தில் அன்னிபெஸண்டு அம்மையாரால் நடத்தப்படும் "புதிய இந்தியா" என்னும் பத்திரிகையில் அப்பத்திரிகா ஸ்தலத்திற்குவரும் கடிதங்களெல்லாம் ரகஸ்யப் போலீசாரால் திருடப்பட்டு விடுகின்றனவென்று ஒரு குறிப்பு இருந்தது. இத்திருட்டு சென்ற சிலவருஷங்களாக இந்தியாவில் இடம்பெற்றுக்கொண்டது. தபாலில்வரும் சஞ்சிகைகளையும் பத்திரிகைகளையும் திருடுவதற்கு ஆங்காங்கு சிலர் ஏற்பட்டிருக்கின்றனர் போலத் தோன்றுகிறது. சென்ற இரண்டு மாதகாலமாக நமது பத்திரிகை வந்து சேரவேயில்லையென்று அநேகர் நமக்குத் தெரியப்படுத்த, நாம் அவர்களுக் கெல்லாம் பத்திரிகைகளை இரண்டாமுறை யனுப்பினோம். இந்தப்பத்திரிகைத்திருடர்கள் அநேகநாட்கள் தங்களுடைய தொழிலை நடத்திக்கொண்டிருக்க முடியாது. இந்த பெருச்சாளிகளைக்கண்டு பிடிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைத் தபாலிலாகா அதிகாரிகள் செய்யவேண்டியது.